**IHP**
INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 13 September 2024
நேரம் : 04:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info 'at' ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

## 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அ. கு. திசாநாயக்க மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் மதிப்பீடுகள் குறைந்த அதேவேளை சஜித் பிரேமதாசாவின் சாதகத்தன்மை மதிப்பீடு மேம்பட்டது.

*அனைத்து முன்னணி ஜனாதிபதி வேட்பாளர்கள் குறித்தும் பொதுமக்கள் சாதகமற்ற கருத்தைக் கொண்டிருந்தாலும், அ. கு. திசாநாயக்க குறைந்தபட்ச மறைகணிய மதிப்பீட்டைப் கொண்டிருந்தார்.*

IHP SLOTS 2024 ஆகஸ்ட் கருத்துக்கணிப்பில், எஸ். ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவின் நிகர சாதகத்தன்மை மதிப்பீடு -32 ஆக உயர்ந்துள்ளது (ஜூலையுடன் ஒப்பிடுகையில் +10 புள்ளிகள்). இதேவேளையில், என்.பி.பி./ஜே.வி.பி தலைவர் அ. கு. திசாநாயக்க மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் மதிப்பீடுகள் முறையே -21 (-16 புள்ளிகள்) மற்றும் -33 (-4 புள்ளிகள்) ஆகக் குறைந்தன. எஸ். எல். பி. பி. யின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் சாதகத்தன்மை மதிப்பீடு ஆகஸ்ட் மாதத்தில் -89 ஆக இருந்தது.




ஒவ்வொரு மாதத்திற்குமான சாதகத்தன்மை மதிப்பீடுகள், அந்த மாதத்தில் மற்றும் அதற்கு முன்னும் பின்னும் சில கிழமைகளிழும் நடத்தப்பட்ட 100-500 நேர்காணல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு முக்கிய கட்சி தலைவர்களுக்கான குறைந்தபட்ச பதில்கள் பெறப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது. ஆகஸ்ட் 2024 மதிப்பீடுகள் சஜித் பிரேமதாசவிற்கு 517, அ. கு. திசாநாயக்கவிற்கு 491, ரணில் விக்கிரமசிங்கவிற்கு 530, நாமல் ராஜபக்சவிற்கு 639 மற்றும் கோட்டாபய ராஜபக்சவிற்கு 384 பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டது.

## தொகுப்பாளருக்கான குறிப்புகள்

1. ஊடக அறிக்கைகளில் இந்த எண்கள் வெளிவரும்போது பொதுமக்களில் சிலர் இவற்றை தவறாக புரிந்துகொள்வதை நாங்கள் அவதானித்துள்ளோம். <u>மறைகணி</u> மதிப்பெண்கள் அதாவது <u>பூச்சியத்தைவிட குறைவான</u> நிகர சாதகத்தன்மை மதிப்பீடு, தனி நபர் அல்லது நிறுவனம் பிரபலமற்றவர்/பிரபலமற்றது என்று அர்த்தமாகும். <u>நிறைகணி</u> மதிப்பெண்கள் அதாவது <u>பூச்சியத்தைவிட அதிகமான</u> நிகர சாதகத்தன்மை மதிப்பீடு மட்டுமே, சராசரியாக தனி நபர் அல்லது நிறுவனம் பிரபலமானவர்/பிரபலமானது என்று அர்த்தமாகும்.
2. தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக அறிக்கைகள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு இணங்க கருத்துக்கணிப்பு முறையியல் மற்றும் நிதியுதவி கீழே வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும்.

## தொடர்புடைய அறிக்கைகள்

Institute for Health Policy, August 2024, "AK Dissanayake's and President Wickremesinghe's favourability ratings largely improved in July 2024" Available at: https://ihp.lk/press-releases/ak-dissanayakes-and-president-wickremesinghes-favourability-ratings-largely-improved

Institute for Health Policy, July 2024, "Favourability of Sajith Premadasa and Pres. Ranil Wickremasinghe improves in June 2024, But AK Dissanayake continues to lead" Available at: https://ihp.lk/press-releases/favourability-sajith-premadasa-and-pres-ranil-wickremasinghe-improves-june-2024-ak

Institute for Health Policy, April 2024, "Favourability of Sajith Premadasa improves in March 2024, But AK Dissanayake continues to lead" Available at: https://ihp.lk/press-releases/favourability-sajith-premadasa-improves-march-2024-ak-dissanayake-continues-lead

Institute for Health Policy, March 2024, "Favourability ratings of major party leaders declined in February 2024" Available at: https://ihp.lk/press-releases/favourability-ratings-major-party-leaders-declined-february-2024

Institute for Health Policy, February 2024, "AK Dissanayake sees favourability ratings improve, but other party leaders see declines in January 2024." Available at: https://ihp.lk/press-releases/ak-dissanayake-sees-favourability-ratings-improve-other-party-leaders-see-declines

Institute for Health Policy, December 2023, "Sajith Premadasa's favourability rating improved in November, but still trailed AK Dissanayake." Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231215.pdf*

Institute for Health Policy, November 2023, "AK Dissanayake continues to see his favourability improve, while it worsens for other party leaders." Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231117.pdf*

Institute for Health Policy, April 2022, "SLOTS Favourability Ratings: Methodology for tracking public favourability", SLOTS Report #2022-03. *Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202203.pdf*

## IHP பற்றி

இந்த கருத்துக்கணிப்பை ஆணையிடுவதற்கும் வடிவமைக்ககவும் IHP மட்டுமே பொறுப்பு, மேலும் இதற்கு முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு, இலங்கை மற்றும் வெளிநாடுகளில் மூன்று தசாப்தங்களாக பல கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளார்.

## முறைமை பற்றிய விவரங்கள்

SLOTS ஆனது எழுமாற்றாக அழைக்கப்பட்ட கைத்தொலைபேசி இலக்கங்கள், மற்றும் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தனிநபர்களை ஆட்சேர்ப்பு படுகை நிகழ்தகவு கூறு (stratified probability sample) முறையை பயன்படுத்திய கள ஆய்வு மூலம் முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தேசிய பதிலளித்தவர்களின் குழாமிலிருந்து வந்த வயது வந்தோரின் (18 வயது மற்றும் அதற்கு

மேற்பட்டவர்கள்) தேசிய கூறினை ஆய்வு செய்கின்றது. பதிலளிப்பவர்களிடம் ஒரு பொது நபர் அல்லது நிறுவனம் பற்றி அவர்களுக்கு சாதகமான அபிப்பிராயம் உள்ளதா அல்லது சாதகமற்ற அபிப்பிராயம் உள்ளதா என்று கேட்பதன்மூலம் SLOTS சாதகத்தன்மையை கணக்கிடுகின்றது: நேர்கணிய(+100) மற்றும் மறைகணிய(-100) பதில்களின் சராசரியே நிகர சாதகத்தன்மையாகும். தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, துறை, மாகாணம் மற்றும் 2019 மற்றும் 2020 தேர்தல்களின் முந்தைய வாக்காளர் தீர்மாணத்தோடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன. மாதாந்திர மதிப்பீடுகள் அந்த மாதத்தில் நடத்தப்பட்ட மற்றும் அம்மாதத்திற்கு முந்தைய சில வாரங்கள் மற்றும் பின் வந்த சில வாரங்களில் நடத்தப்பட்ட 100+ நேர்காணல்களை அடிப்படையாகக்கொண்டு மதிப்பிடப்படுகின்றன. இந்த புதுபிப்பு, முந்தைய புதுப்பிப்பைவிட சமீபத்திய தரவுகளை பயன்படுத்துவதால் முந்தைய மாதங்களின் சாதகத்தன்மை மதிப்பீடுகளில் சிறிய மாற்றங்கள் உள்ளன.

### கருத்துக் கணிப்பின் நோக்கம் மற்றும் நிதியுதவி

IHP, இலங்கையின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust) , ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission) , ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), யு .எஸ். எயிட் (USAID) வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகம் (New York University Abu Dhabi) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள், தற்போதைய மற்றும் முந்தைய நிதியுதவியாளர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.